மலையகத் தமிழரும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும்

[1]லா. உமாரோஸ்லின் & [2]முனைவர். சு. மேரி சுபா செல்வராணி
[1]முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண்: 22212014022008
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)
mgpN\fgபட்டி, திருநெல்வேலி
[2]நெறியாளர் & உதவிப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

முன்னுரை

இந்தியா, இலங்கை இரண்டு நாடுகளும் அண்டை நாடுகளாக இருக்கின்றன. வரலாற்றின் தொன்மைமிக்க நாடுகளாகவும் நீண்ட பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்ட நாடுகளாகவும் இருக்கின்றன. ஆங்கிலேயரின் நாடு பிடிக்கும் கொள்கையால் இந்தியா, இலங்கை இரண்டும் ஆங்கிலேயரின் வசம் சென்றது. பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெறுதல் வேண்டி ஆங்கிலேய அரசு பல்வேறு செயல்களை நடைமுறைப்படுதியது. அதில் இரப்பர், காப்பி, தேயிலை, போன்ற தோட்டத்தொழில்களும் சுரங்கப்பாதை, இரயில் பாதை அமைப்பு, போன்ற தொழில்களையும் விரிவுபடுத்தியது. அதற்காக இந்தியமக்களை தனது காலனியத்துவ நாடுகளுக்கு அடிமைமுறையாக ஆங்கிலேய அரசு கொண்டு சென்றது. ஆங்கிலேய அரசின் காலனிய நாடுகளில் ஒன்றான இலங்கைக்கும் தென்னிந்திய மக்களை கொண்டு சென்றது. தேயிலைத் தோட்டத்தொழிலுக்காக இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்ட மக்கள் இலங்கையின் மலையக பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர். நாளடைவில் அம்மக்கள் 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்தப்பட்டனர். இந்த மலையகத் தமிழர்கள் ஐந்து தலைமுறைகளாக இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காற்றினர். பல நெருக்கடி வாழ்வுக்கு மத்தியில் 200 ஆண்டுகளுக்கு பிறகு குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். நாடற்றவர் என்ற நிலைக்கு மாற்றப்பட்டதற்கு சிறிமா- சாஸ்திரி என்ற ஒப்பந்தம் காரணமாக இருக்கின்றது. மலையகத்தமிழரின் வரலாற்று பாதையில் முக்கியத்துவம் பெற்ற இந்த ஒப்பந்தம் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

ஐரோப்பியர் வருகைக்கு முன்

இந்தியா இலங்கை நாடுகள் புவி பரப்பில் அண்டை நாடுகளாக இருந்த காரணத்தால் ஐரோப்பியர் வருகைக்கு முன்னரே இங்கு இயல்பாக இடப்பெயர்வு நடைபெற்றுள்ளது. இதை வரலாற்று செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. சங்க காலத்திற்கு முன்பே இந்தியாவிலிருந்து இலங்கை தீவிற்கு தமிழக மக்கள் புலம் பெயர்ந்துள்ளதை இந்திய தமிழர் குடிப்பெயர்வு என்ற நூலில் முனைவர் மாரிமுத்து பதிவு செய்துள்ளார்.

"பெருந்தோட்ட உருவாக்கத்திற்கு முன்பே பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து சாலியர் என்ற சாதியினர் இலங்கையில் குடியேறியுள்ளனர். போர்ச்சிகீசியர் டச்சுக்காரர்கள் காலத்தில் இலங்கையில் கருவாப்பட்டை மற்றும் காரீயம் வெட்டும் சுரங்கத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார்கள்."

(சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், மு.சி. கந்தையா, பக்-29)

மேலும் **"பதிமூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் உள்ள கரவா சாதியர் இலங்கையின் தென்பகுதியில் குடியேறினர். தூத்துக்குடி பரதவர்கள் மதுபான வியாபாரத்திலும் துறைமுகப்பணியிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்"**(சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், மு.சி. கந்தையா, பக்-30) இச்சான்றுகள் வரலாற்றுக்கு முந்தையகாலம் முதல் ஐரோப்பியர் வருகைக்கு முன்பு வரையும் இந்திய இலங்கை இடம் பெயர்வுகள் இயல்பாக நடைபெற்றுள்ளதை எடுத்துக்கூறுகின்றது.

ஐரோப்பியர் வருகைக்கு பின்

வணிகத்துக்காக வந்த ஆங்கிலேயர் இந்திய நாட்டை தமது காலனி நாடாக ஆக்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சம் பல்லாயிரக் கணக்கானோரைக் காவு கொண்டது. பல ஆண்டுகள் நீடித்த கடும் பஞ்சத்தால் பொருளாதர நெருக்கடியில் இருந்து கிராமங்கள் வறுமையில் சிக்குண்டனர். இந்த உளவியல் நிலையை பயன்படுத்தி பஞ்சத்தில் சிக்கிய மக்களை ஆங்கிலேயர் தங்களுக்குகக் கீழ் உள்ள காலனிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னை மாகாண தலைமைச் செயலாளர் தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு எழுதிய கடித்தில் விவசாயத் தொழிலாளர்கள் குடியமர்த்த எடுக்கப்பட்ட முயற்சிகள் சாத்தியபடவில்லை உங்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொண்டு கால்நடைகளையும் தொழிலாளர்களையும் இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கையை மேற்கொள்ளவும்"

(சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், மு.சி. கந்தையா, பக்-34)

என்ற செய்தியையும் அதற்கு பதில் கூறும் விதமாக **"தஞ்சை விவசாயிகள் தங்களது கிராமங்களிலிருந்து வெளியேறி உழைத்து வாழனும் என்கிற நிலையில் இல்லை"** (சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், மு.சி. கந்தையா, பக்-34) என்று தஞ்சை மாவட்ட ஆட்சியரின் கடிதம் குறிப்பிடுகின்றதை ஆவணங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஆங்கிலேயரின் காலனி நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து கூலிகளை ஒப்பந்த முறையில் கொண்டுச்செல்ல ஆள்பிடிக்கும் முகவர்களுக்கு அரசு உரிமம் வழங்கியது. இதனடிப்படையில் இலங்கைக்கு அழைத்துச் செல்வதில் ஒப்பந்த முறை மற்றும் கங்காணி முறை போன்றவை பின்பற்றப்பட்டன.

1847 ஆம் ஆண்டு பிரித்தானிய நாடளுமன்றத்தில் முதலாவது குடிப்பெயர்வு சட்டம் நிறை வேற்றப்பட்டது அச்சட்டத்தின் வாயிலாக தென்னிந்திய தமிழர்களை இலங்கைக்கு அழைத்துச் சென்றது, ஆங்கிலேய அரசு. இதுபோன்ற பல முயற்சிகள் மேற்கொண்டு தமிழக தொழிலாளர்களை இலங்கைக்கு பெருந்தோட்டத் தேயிலை விவசாயம், இரப்பர் விவசாயம், இரயில்பாதை அமைப்பு போன்ற வேலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டதை வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்த குறிப்புகள் வழி ஆங்கிலேயர்களின் காலனியத்துவ தமிழக மக்களின் இடப்பெயர்வு இலங்கையை நோக்கி நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது. ஆனால் தமிழக மக்கள் தாமாக முன் வந்து இலங்கையை நோக்கி இடப்பெயர்வு

செய்யவில்லை மாறாக, ஆங்கில அரசால் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

கங்காணி முறை

இலங்கைத் தோட்டத் துரைமார்களும் ஆங்கிலத் துரைமார்களும் தேயிலைத்தோட்டத்தில் அதிக வருவாய் பெற்றனர். இதனால் தேயிலை உற்பத்தி நாளுக்கு நாள் அதிகமாயின. அதனால் தோட்டடத்தொழிலுக்கு அதிக கூலியாட்கள் தேவைப்பட்டுள்ளனர். அதன் பொருட்டு ஆங்கில அரசு கங்காணி முறையை அமல் படுத்தியது. இந்தியாவில் கூலியாட்களைத் திரட்டிச்செல்ல இலங்கை தோட்ட துரைமார்கள் பின்பற்றிய முறை கங்காணி முறையாகும். தோட்ட வேலைக்கு ஆட்களைத் திரட்டியவர்கள் அந்தந்தக் கிராமத்தில் செல்வாக்குள்ளவர்களாக திகழ்ந்தனர். இவர்கள் கங்காணி என தென்னிந்திய மக்களில் ஒருவராக உள்ள தொழிலாளி தான். கங்காணிமார்கள் தோட்டத்துரைமார்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டனர். ஆனால் வெள்ளந்தி மனத்துடன் இந்த தோட்டத்தொழிளார்கள் இந்த கங்காணியரை முழுமையாக நம்பினர். இருந்தபோதும் பணம் சம்பாதிப்பதில் உள்ள ஆசையில் தன்னை நம்பும் உழைக்கும் மக்களுக்கும் உழைப்புக்கும் உண்மையற்ற நிலையில் இந்த கங்காணியர்கள் இருந்துள்ளனர் என்பதை இந்த மலையக வரலாற்று குறிப்புகள் எடுத்துரைக்கின்றன.

மலையகத் தமிழர்கள்

மேற்குறிப்பிட்டவாறு ஆங்கிலேயர்கள் மற்றும் இலங்கைத் தோட்டத்துறைமார்களின் முயற்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கடந்த 200 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் குடியமர்த்தப்பட்டவர்கள் தான் 'மலையகத் தமிழர்கள்' அல்லது 'இந்தியவம்சாவளித் தமிழர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இலங்கையில் 2000 அடிகளுக்கு மேற்பட்ட உயரத்தில் மலைபிரதேசங்களில் நிலையான பெருந்தோட்டப் பயிர்களாகிய தேயிலை, இரப்பர் என்பன பயிரிடப்பட்டன. பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தால் இம்மலைசார்ந்த பகுதிகளில் தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கூலித்தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டனர். காலப்போக்கில் அதிகப்படியான தொழிலாளர்கள் குறியேற்றப்பட்டதால் மலையகத்தமிழர் என்ற தேசிய இனமானது உருவாக்கம் பெற்றது.

"மலையகத்தமிழ் மக்கள் என்று அர்த்தப்படும் போது அதில் ஓர் புவியியல் பிரதேசம் உள்ளடக்கி இருப்பதோடு இந்நாட்டில் இருக்கும் கிட்டதட்ட 30 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினரான 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை அடையாளங்காட்டுவதாகவும், மலையகத் தமிழர் என்ற பதம் விளங்குகின்றது."

(மலையகமும் மறுவாழ்வும், பக்(53)

அவ்வாறு புலம்பெயர்ந்த மக்களின் கடின உழைப்பின் பலனாக

"உலகிலேயே தேயிலை உற்பத்தியில் இலங்கை முதலிடம் வகிக்கின்றது. இத்தேயிலை தோட்டத்தில் வேலைபார்க்கும் சுமார் பத்து இலட்சம் தமிழர்கள் இந்திய வம்சாவழியினர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு புலம் பெயர்ந்தவர்களே இன்று வரை தேயிலைத் தோட்டங்களில் பாடுபடும் உழைப்பாளர்களாக உள்ளனர்"

(நிலம் பெயர்ந்த தமிழர் வேரும் விழுதும், உகலகத் தமிழர்ப் பண்பாட்டு இயக்கம்-மலேசியா, சண்முகம், ப.கு, அறவாணன்,க.ப., அறவேந்தர். பக்-90)

இலங்கையில் தோட்டத்தொழிலாளியான தமிழர்கள் பட்ட தாங்கொன்னா துயரங்களையும் ஒடுக்குமுறைகளையும் **'எரியும் பனிக்காடு' 'சிதைக்கபட்ட மலையத்தமிழர்கள்' 'ஜென்ம பூமி சிறுகதைகள்' 'எங்கெங்கும் அந்நியப்பட்டவர்க, கண்டி சீமையிலே, மலையகத் தமிழர் அரசியல், பரதேசம் போன தமிழர்களின் பரிதாப பாடல்** போன்ற பல நூல்களின் வழி அறிய முடிகின்றது.

இலங்கை, விடுதலைப்பெற்ற 1948 ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பல சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டன. மேலும் மேலும் தமிழர்களின் ஒடுக்குதல் நடைபெற்ற நிலையில் போராட்டங்கள் தலையெடுத்தன. அதன் விளைவாக தமிழர் - சிங்கள மக்களிடை இனக்கலவரம் ஏற்பட்டது. இனக்கலவரம் தீவிரம்பெற்ற நிலையில் குடியுரிமை பறிப்புச் சட்டம் மூலம் மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கும் நிலை ஏற்படுகின்றது.

சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை

போராட்டங்கள் வலுப்பெற்ற நிலையில் இருநாட்டு அரசுகளும் இணைந்து ஒரு ஒப்பந்ததில் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தம் அன்றை இந்திய பிரதமர்.லால் பகதூர் சாஸ்திரி, இலங்கை நாட்டு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இருவருக்கும் இடையில் நடைபெற்றது. 1964- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதியன்று துவங்கிய பேச்சுவார்த்தை ஆறு நாட்கள் தொடர்ந்து அக்டோபர் 30 அன்று முடிவுக்கு வந்தது1964- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதியன்று துவங்கிய பேச்சுவார்த்தை ஆறு நாட்கள் தொடர்ந்து அக்டோபர் 30 அன்று முடிவுக்கு வந்தது.

" இந்த ஒப்பந்தபடி 1964 செப்டம்பர் 25 தேதிகளில் இலங்கையிலிருந்த இந்தியர்கள் எண்ணிக்கை 10,08,269 பேர். இதில் இந்திய பாஸ்போர்ட் வைத்திருந்த 28,269 பேர் போக மீதி 9,75,000 பேர். இதில் 5,25,000 பேருக்கு இந்தியா குடியுரிமை வழங்க வேண்டும். அதே காலக்கட்டத்தில் இலங்கை 3,00,000 பேருக்கு குடியுரிமை வழங்க வேண்டும். எஞ்சியுள்ள 1,50,000 பேரின் விதியை 1974 ஜனவரியில் தீர்மானிப்பது என்பன இந்த தீர்மானத்தின் சாரம்"

(ஈழத்தமிழ் தமிழ்ச் சமூக உருவாக்கமும் அரசியல் தீர்வும், அ.மார்க்ஸ், பக்-69)

அதன்படி பத்தாண்டுகள் நிறைவடைந்த பின்பு அன்றைய இந்திய பிரதமர் இந்திராகாந்திக்கும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இருவருக்கும் இடையில் நடைபெற்றது. இந்த இரு நாடுகளும் 75,000 என சமமாகப் பங்கிட்டுக் கொண்டன. இந்த ஒப்பந்தம் மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகயையும் மீறுவதாக அமைந்திருக்கின்றது என்பது மலையகத்தமிழர் உரிமைக்காக போராடும் அனைத்து மக்களின் கருத்தாக இருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தின்படி மக்களிடம் எந்தவிதமான கருத்துகளும் கேட்கப்படவில்லை. அதுமட்டுமன்று இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் என்று அச்சுறுத்தும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"குடியுரிமை மறுக்கப்பட்டவர்கள் அழ அழ ரயிலில் ஏற்றி அனுப்பப்பட்டனர். அவர்களை ஏற்றிவந்த ரயில் 'அழுகை கோச்சி' என்றே அடைக்கப்பட்டது. இவர்களில் பலர் இந்தியாவை

ஏற்கனவே பார்த்திராதவர்கள். சராசரியாக இவர்களிடமிருந்த சொத்து ரூ. 4,000. 15 சதத்தினர் மட்டுமே 10,000 ரூ. மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருந்தனர். இவர்களில் 85 சதம் பேர் கல்வியற்றவர்கள்."

(ஈழத்தமிழ் தமிழ்ச் சமூக உருவாக்கமும் அரசியல் தீர்வும், அ.மார்க்ஸ், பக்-69)

எவ்வித முன்னேற்பாடும் இன்றி நாடு விட்டு நாடு இடம்பெயர்ந்து இந்த சொற்ப பணத்தை கையில் வைத்துக்கொண்டு வாழ முற்படுவது துன்பம் மிகுந்த வாழ்க்கையாகும். அப்படிப்பட்ட துயரம் மிகுந்த வாழ்க்கையை மலையக மக்களின் வரலாற்றுப் பதிவுகளாக ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். இந்த ஒப்பந்தம் படி 1980-க்குள் தாயகம் திரும்ப வேண்டும். பல்வேறு அரசியல், நடவடிக்கைகளால் குறிப்பிட்ட ஆண்டுக்குள் திரும்பமுடியவில்லை. அதற்குள் தமிழர் மற்றும் சிங்களவர் இடையே இனக்கலவரம் தீவிரம் அடையத் தொடங்குகின்றது. இரு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படுகின்றது. ஆதால் இந்திய கடவுச்சீட்டு பெற்றிருந்த 80,000 மக்கள் இந்தியா திரும்ப முடியவில்லை. அவர்கள் இலங்கையிலே தங்கிவிட்டனர்.

முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய காலனியத்துவத்தால் இந்தியாவின் தென்தமிழகத்தில் இருந்து தோட்டத்தொழிலுக்காக தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அதிகப்படியான தொழிலாளர்கள் தேவைப்பட்ட நிலையில், குடிபெயர்வு சட்டம் இயற்றியும் கங்காணிமுறையிலும் தொழிலாளர்கள் அழைத்துச்செல்லப்பட்டனர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். அவர்களின் உழைப்பு சுரண்டலின் மூலம் இலங்கை பொருளாதாரத்தில் தேயிலை முதன்மை இடம் பிடித்தது. 1948-ல் இலங்கை ஆங்கிலேயரிடம் விடுதலை பெற்றனர். சிங்கள தலைவர்கள் தமிழருக்கெதிராக பல சட்டங்களை நடைமுறைப்படுத்தினர். அதில் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் இந்திய- இலங்கை முக்கிய நிகழ்வாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி இருநூற்றாண்டுகளாக இலங்கை முன்னேற்றத்திற்காக பாடுபட்ட மக்கள் தமிழக மக்கள் இனவெறியின் காரணமாக மீண்டும் தமிழகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். உறவுகளையும், நான்கு, ஐந்து தலைமுறை வாழ்வையும் விட்டு தமிழகம் நோக்கி வந்தனர். அனைத்தையும் இழந்த நிலையில் இந்தியா கொண்டுவரப்பட்ட மக்கள் பல்வேறு துயரங்களுக்கு பிறகு மீண்டு வந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. மேலும் இந்திய அரசின் புனர்வாழ்வு திட்டங்கள் மூலம் அடிப்படை உரிமைகளைப் பெற்று மீண்டும் இந்திய மக்களாக தற்போது இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

துணைநூற் பட்டியல்

1. கந்தையா, மு.சி. சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள். (இந்திய வம்சாவளியினர்) முதல் பதிப்பு: மே 2022, பொன்னுலகம் புத்தக நிலையம், 3/413, 3-ஆவது வீதி, திருப்பத்தூர்-641 603.
2. தமிழவன், தொகுப்பு, மலையகமும் மறுவாழ்வும், 5/204, குழந்தை இயேசு கோயில் தெரு, ஐந்தாவது தெரு, திருநகர், பொன்மலை, திருச்சி,-4

3. எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், (தொ. பன்னீர்செல்வம். எஸ். நூதன். பி. எஸ், சிராக் வெளியீடு 19/6-B, ஏழாவது தெரு, கொடைக்கானல் 624102. மதுரை மாவட்டம், தமிழ்நாடு
4. மார்க்ஸ். அ. ஈழத்தமிழ் தமிழ்ச் சமூக உருவாக்கமும் அரசியல் தீர்வும், முதல் பதிப்பு, நவம்பர் 2009, 333/216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி சென்னை-600 005.
5. நிலம் பெயர்ந்த தமிழர் வேரும் விழுதும், உகலகத் தமிழர்ப் பண்பாட்டு இயக்கம்-மலேசியா, சண்முகம், ப.கு, அறவாணன்,க.ப., அறவேந்தர். இரா. (சென்னை-2007) பக்-90
6. மோகன் ராஜ், இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (மலையக மக்கள் வரலாறு) முதற்பதிப்பு ஜுன், 1984 ஈழ ஆய்வு நிறுவன வெளியீடு, Eelam Research Organization, 179 Norval Road, North Wembly, United Kingdom.